# முன்னரே குடிநீர் தட்டுப்பாடு

## பல மாவட்டங்களில் பொதுமக்கள் தவிப்பு

**சென்னை, ஏப். 21–**

கோடை தீவிரம் அடைவதற்கு முன்னரே, பல மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு தலை தூக்கியுள்ளதால், பொதுமக்கள் தவித்து வருகின்றனர்.

மாநிலம் முழுதும் 90 அணைகள், 14,110 ஏரிகள், நீர்வளத்துறை பராமரிப்பில் உள்ளன. இவற்றின் வாயிலாக, பல்வேறு மாவட்டங்களில், பாசனம், குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. அணைகளின் ஒட்டு மொத்த கொள்ளளவான, 224 டி.எம்.சி.,யில், 128 டி.எம்.சி., நீர் கையிருப்பில் உள்ளது.

இதில், 20 அணைகள் வறண்டு கிடக்கின்றன. பெரும்பாலான அணைகளில், 40 சதவீதத்திற்கும் குறைவான நீர் இருப்பே உள்ளது. ஏரிகளை பொறுத்தவரை, 1,166 ஏரிகள் முழுமையான வறண்டு விட்டன.

மேலும், 3,434 ஏரிகள் வறண்டு விடும் நிலையில் உள்ளன. இது தவிர, 3,853 ஏரிகளில், 50 சதவீதத்திற்கு குறைவாகவே நீர் இருப்பு உள்ளது. தமிழக குடிநீர் வாரியம் வாயிலாக, நகரம் மற்றும் ஊரகப் பகுதியில் உள்ள குடியிருப்புகள், வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் உள்ளிட்டவற்றுக்கு, குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.



அதுமட்டுமின்றி, பல்வேறு உள்ளாட்சி அமைப்புகள் வாயிலாகவும் பொதுமக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

கோடை வெயில் தீவிரம் அடைவதற்கு முன்பாகவே, கோவை, சேலம், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல் உள்ளிட்ட பல மாவட்டங்களில், குடிநீர் தட்டுப்பாடு தலைதூக்கி உள்ளது.

மக்கள் தண்ணீருக்கு தவித்து வருகின்றனர். சட்டசபையிலும் இப்பிரச்னை எதிரொலித்து வருகிறது. பல எம்.எல்.ஏ.,க்கள் தங்கள் தொகுதியில், 10 நாட்களுக்கு ஒரு முறை, வாரம் ஒரு முறை குடிநீர் வினியோகம் நடக்கிறது என, புகார் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால், புதிய கூட்டுக் குடிநீர் திட்ட குழாய் பதிப்பு, பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் நடப்பதால், குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதாக, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் நேரு விளக்கம் அளித்து சமாளித்து வருகிறார்.

கோடை காலத்தில், குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்க தேவையான நடவடிக்கை எடுப்பது குறித்து, ஏப்ரல் மாதம், தலைமைச் செயலர் தலைமையில், ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும்.

தற்போது சட்டசபை கூட்டம் நடப்பதால், அந்த கூட்டம் குறித்த தேதி இன்னும் அறிவிக்கப்படாமல் உள்ளது. குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்க, சிறப்பு நிதி ஒதுக்குவதிலும் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

குடிநீருக்காக மக்கள் வீதிக்கு வருவதற்கு முன், உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டியது அவசியம்.

# பழனிசாமி சட்டசபையில் பேசட்டும்

**வேலூர், ஏப். 21–**

"நீட் தேர்வு விவகாரம் குறித்து தைரியமிருந்தால், பழனிசாமி சட்டசபையில் பேசட்டும்," என்று, அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

வேலூர் மாவட்டம் சேவூரில், 6.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில், காங்கேயநல்லூர் – அம்முண்டி வரை கால்வாயை தூர்வாரும் பணி நிறைவு பெற்று, பயன்பாட்டுக்கு கொண்டு வரும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

அமைச்சர் துரைமுருகன் கால்வாயை திறந்து வைத்து பேசுகையில், "தமிழகத்தில் தொழிலாளர் பிரச்னை இல்லாவிட்டாலும், எட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தமிழகத்தில் மூடியே கிடக்கின்றன.

ஆனால், காட்பாடி கூட்டுறவு சர்க்கரை ஆலையை மட்டும், என் திறமையால் இயக்கச் செய்துள்ளேன்," என்றார்.

பின், அவர் அளித்த பேட்டி: கர்நாடகா அரசு, மேகதாது அணைக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்க, மத்திய அரசிடம் பணம் செலுத்தியது.

அதனாலேயே, அதை தயாரித்து வழங்கியுள்ளனர். அதனால், தமிழகத்துக்கு எந்த பாதிப்பும் கிடையாது. மேகதாது அணை கட்டும் விவகாரத்தில், மத்திய அரசின் நான்கு கமிட்டிகள், கர்நாடக அரசு கோரிக்கையை ஏற்காமல், திருப்பி அனுப்பி விட்டன.



■ துரைமுருகன்

சுற்றுச்சூழல் துறை, மத்திய நீர்வளத்துறை அனுமதி வழங்கவில்லை. தமிழகத்தின் ஒத்துழைப்பு இன்றி, ஒருநாளும் கர்நாடக அரசால் மேகதாது அணை கட்டவே முடியாது. முல்லைப் பெரியாறு பிரச்னை குறித்து முழுதுமாக எதுவும் தெரியாமல், எதிர்கட்சித் தலைவர் பழனி சாமி பேசி வருகிறார். முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக, வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. அப்படி இருக்கும்போது, கேரள அரசை கண்டித்து, தமிழக சட்ட சபையில் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்கிறார் பழனிசாமி.

தமிழக அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்காக இப்படி பேசுகிறாராம். நல்ல வேடிக்கை.

தைரியம் இருந்தால், நீட் விவகாரம் குறித்து, தமிழக சட்டசபையில் அ.தி.மு.க.,வின் பழனிசாமி பேச வேண்டும். பேசினால், அவருடைய தைரியத்தை பாராட்டலாம்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கூறினார்.


இந்திய ரிசர்வ் வங்கி

RESERVE BANK OF INDIA

www.rbi.org.in

தமிழ்நாடு மாநில அரசாங்கத்தால் மறுவெளியீடு 6.71% எஸ்டிஎல் 2035 ஏலம்

தமிழ்நாடு மாநில அரசு ₹2,000 கோடி மொத்த மதிப்பு (முக மதிப்பு) உடைய பத்திரங்களை ஏல விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது.

பன்முக விலை அமைப்பின் கீழ், பலன் அடிப்படையில் நடத்தப்படும் இந்த ஏலமானது, இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கிய வங்கி செயல்பாடுகளுக்கான மையப்படுத்தப்பட்ட கணினித் தீர்வு (CBS) (E-Kuber) மூலம் ஏப்ரல் 22, 2025 (செவ்வாய்க்கிழமை) அன்று நடத்தப்படும். தனிப்பட்ட முதலீட்டாளர்களும் ... (https://rbiretaildirect.org.in)

மேலும் விவரங்களுக்கு ஏப்ரல் 17, 2025 (வியாழக்கிழமை) தேதியிட்ட இந்திய ரிசர்வ் வங்கியின் பத்திரிக்கை வெளியீட்டை (www.rbi.org.in) என்ற இந்திய ரிசர்வ் வங்கியின் இணையதளத்தில் பார்க்கவும்.

"பணம் அளிப்பதாக உங்களுக்கு வரும் மின்னஞ்சல்கள் / குறுஞ்செய்திகள் / அழைப்புகள் போன்றவற்றால் ஏமாறாதீர்கள்."


# என்.எல்.சி.,யில் ரகசிய ஓட்டெடுப்பு

## தொழிற்சங்கங்கள் தீவிர பிரசாரம்

**நெய்வேலி, ஏப். 21–**

கடலூர் மாவட்டம், என்.எல்.சி.,யில் வரும் 25ம் தேதி அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களுக்கான ரகசிய ஓட்டெடுப்பு நடக்கிறது. நெய்வேலி சட்டசபை தொகுதியின் வெற்றி, தோல்வியை நிர்ணயிப்பது என்.எல்.சி.,யில் பணிபுரியும் 25,000 பணியாளர்களின் குடும்பங்கள் என்பதால், அரசியல் கட்சிகள் ரகசிய ஓட்டெடுப்பில் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர்.

ரகசிய ஓட்டெடுப்பின் போது, தி.மு.க., தரப்பில் அமைச்சர் கணேசன், சபா ராஜேந்திரன் எம்.எல்.ஏ., மற்றும் அ.தி.மு.க., தரப்பில் மாவட்ட செயலாளர்கள் சொரத்தூர் ராஜேந்திரன், அருண்மொழித்தேவன், முன்னாள் எம்.எல்.ஏ., சிவசுப்பிரமணியன் ஆகியோர் சொந்த பணத்தை செலவு செய்து, ஓட்டு வேட்டையில் இறங்கியுள்ளனர்.

பா.தொ.ச.,–சி.ஐ.டி.யூ.,–தி.தொ.ஊ.ச., பி.எம்.எஸ்., ஆகிய 4 தொழிற்சங்கத்தினர், தொ.மு.ச., மற்றும் அ.தி.மு.க., தொழிற்சங்கங்கள் கடந்த காலத்தில் சரியாக செயல்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி பிரசாரம் செய்கின்றனர்.

தொ.மு.ச.,வின், சில நிர்வாகிகள் மீது உறுப்பினர்களிடையே காணப்படும் அதிருப்தி, வர இருக்கும் ரகசிய ஓட்டெடுப்பில் தொ.மு.ச.,வின் சிங்கிள் மெஜாரிட்டி வெற்றியை பாதிக்கும் நிலை உள்ளது.

இதனால், தொ.மு.ச., பேரவை சார்பில், என்.எல்.சி., தொ.மு.ச., வின் உட்கட்சி தேர்தலை வரும் 25ம் தேதிக்கு முன்பாகவே அறிவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.


படிவம் எண். RSC-4

[தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாய விதிகள் (நிறுவனத்தின் பங்கு மூலதனத்தைக் குறைப்பதற்கான நடைமுறை), 2016ன் விதி 3(3)ன் கீழ்]

தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயம் முன்பாக, சென்னை அமர்வு - II

நிறுவனத்தின் மனு எண். 25/CHE/2025

மற்றும்

நிறுவனங்கள், சட்டம் 2013ன் பிரிவு 66 மற்றும் பிரிவு 52 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகளின் கீழ்

மற்றும்

லீப் கிரீன் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் விஷயத்தில்

லீப் கிரீன் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்

CIN: U70101TZ2006PTC013130

பதிவு அலுவலகம்: நான்காவது தளம், கலிடன் சதுக்கம், அவிநாசி சாலை, பீளமேடு, கோயம்புத்தூர் - 641 004

அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்/நிறுவனச் செயலாளர் திரு.சபரி கிரிஷ் எச் அவர்கள் சார்பாக

...மனுதாரர் நிறுவனம்

விளம்பரம் குறித்த அறிவிப்பு

மனுதாரர் நிறுவனத்தின் ஜனவரி 31, 2025ம் தேதி நிலவரப்படி பத்திர பிரீமியம் கணக்கின் ரூ.497,89,02,464க்கு ... எதிராக ஜனவரி 31, 2025 தேதி நிலவரப்படி ... மொத்த கடன் இருப்புத் தொகையான ரூ.482,72,23,564ஆக ... தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வின் ஒப்புதலை பெறுவதற்கு சென்னையில் உள்ள தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தில் ('மாண்புமிகு தீர்ப்பாயம்') மனு எண். CP/25/CHE/2025 ('நிறுவன மனு') மார்ச் 15, 2025 அன்று சமர்ப்பிக்கப்பட்டு ஏப்ரல் 02, 2025 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

மனுதாரர் நிறுவனத்தால் தனிப்பட்ட கடன் வழங்கியவர்களுக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மனுதாரர் நிறுவனத்தால் பிப்ரவரி 28, 2025 அன்று தயாரிக்கப்பட்ட கடன் வழங்கியவர்களின் பட்டியல், மனுதாரர் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை அனைத்து வேலை நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை ஆய்வுக்காகக் கிடைக்கும்.

மனுதாரர் நிறுவனத்தின் எந்தவொரு கடன் வழங்கியவருக்கும் நிறுவன மனு அல்லது கடன் வழங்கியவர்களின் பட்டியலில் உள்ள விவரங்கள் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருந்தால், அதை (ஆதரவு ஆவணங்களுடன்) மற்றும் அவரது பெயர், முகவரி மற்றும் அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் பெயர் மற்றும் முகவரி பற்றிய விவரங்களை அனுப்பலாம். ஏதேனும் இருந்தால், இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், நான்காவது மாடி, காலிடன் சதுக்கம், அவிநாசி சாலை, பீளமேடு, கோயம்புத்தூர் - 641 004 என்ற முகவரியில் உள்ள மனுதாரர் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் கீழே கையொப்பமிட்டவருக்கு அனுப்பவும்.

மேலே குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள் எந்த ஆட்சேபனையும் பெறப்படவில்லை என்றால், நிறுவனத்தின் பங்கு மூலதனத்தைக் குறைப்பதற்கான மேற்கண்ட நிறுவன மனுவின் கீழ் உள்ள அனைத்து நடவடிக்கைகளிலும், கடன் வழங்கியவர்களின் பட்டியலில் உள்ள பதிவுகள் சரியானவையாகக் கருதப்படும்.

மேலும், மனுதாரர் நிறுவனத்தின் மனுவை மாண்புமிகு தீர்ப்பாயம் ஜூலை 23, 2025 அன்று விசாரிக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவும். எந்தவொரு கடன் வழங்குபவரும் விசாரணையில் கலந்து கொள்ள விரும்பினால், அவர் தனது ஆட்சேபனைகள் ஏதேனும் இருந்தால், அதனுடன் ஒரு கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

ஒப்பம்/-

திரு. சபரி கிரிஷ் H,

லீப் கிரீன் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்

(அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்/நிறுவனச் செயலாளர்)

21 ஏப்ரல், 2025 அன்று தேதியிடப்பட்டது

இடம் : கோயம்புத்தூர்


# மூதாட்டியை மிரட்டிய தி.மு.க., பிரமுகர்

## நயினார் நாகேந்திரன் கண்டனம்

**சென்னை, ஏப். 21–**

'ஆயிரம் ரூபாயை நிறுத்தி விடுவேன் என, மூதாட்டியை மிரட்டியதுடன், இலவச அரிசி வாங்குகிறீர்கள் அல்லவா என நக்கல் செய்த தி.மு.க., பிரமுகர் பிரசன்னா மீது, முதல்வர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பதை, மக்கள் பார்த்தபடி இருக்கின்றனர்' என, தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: எளிய மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றவும், ஏற்றத் தாழ்வற்ற சமூகத்தை உருவாக்கவும், இலவசங்கள், உரிமைத் தொகை போன்ற திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனால், தி.மு.க.,வினர் மட்டும் எப்போதுமே, மக்களை கொச்சைப்படுத்தும் விதமாக, அதை சுட்டிக்காட்டி அரசியல் செய்கின்றனர்.



■ நயினார் நாகேந்திரன்

எப்போது பார்த்தாலும், பெண்களின் தன்மானத்தை சீண்டும் விதமாக, தி.மு.க., தலைவர்கள் மேடையில் பேசி வருகின்றனர்.

அம்மாவுக்கும், மகளுக்கும் 1,000 ரூபாய் என, அமைச்சர் துரைமுருகன் பேசினார். அவரது மகன் கதிர்ஆனந்த், 'முகமெல்லாம் பளிச்சென்று உள்ளது. 1,000 ரூபாய் வந்ததா' எனக் கேலி செய்தார். 'ஓசி பஸ்' என பெண்களை, அமைச்சர் பொன்முடி கொச்சைப்படுத்தினார். இதே வரிசையில், தி.மு.க., பேச்சாளர் பிரசன்னா தற்போது இணைந்துள்ளார்.

மூதாட்டி ஒருவர் விலைவாசி ஏற்றத்தை சுட்டிக்காட்டும்போது, ஆளும் கட்சியாக பொறுப்புணர்ந்து பேசாமல், மேடையிலிருந்தே 1,000 ரூபாய் பணத்தை நிறுத்தி விடுவேன் என மிரட்டியும், இலவசமாக அரிசி வாங்குகிறீர்கள் அல்லவா என நக்கல் செய்துள்ளார் தமிழன் பிரசன்னா.

இப்படி மக்கள் நலத் திட்டங்களை வழங்குவது போல் வழங்கி விட்டு, மக்களை யாசகர்கள் போல் இழிவாகப் பேசுவது, தி.மு.க.,வுக்கு புதிதல்ல.

இரண்டாவது முறை ஆட்சிக்கு வர முடியாமல், அவர்கள் வீழ்வதே, அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் நோக்கத்தோடு செயல்பட்டதுதான். இதோ அந்த படுகுழி மீண்டும் வாராய் என, அவர்களை அழைக்கிறது.

அதற்கு முன், ஏளன பேச்சுக்களை பேசும், தனது கட்சிக்காரர்கள் மீது, முதல்வர் ஸ்டாலின் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பதை, மக்கள் பார்த்தபடி இருக்கின்றனர்.

இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.



